**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 348/2018**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வக்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செண்பகம் | தொழில் | : | ஆட்டோ டிரைவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Monday of 15.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 சுப்பிரமணியன் என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் சுப்பிரமணியனின் உறவினர் அர்ஜின் என்பவருக்கு விபத்து ஏற்பட்டதாக கூறி என்னை அழைத்தார்கள். நான் அர்ஜினனின் அப்பா, அம்மா, மாமா சுப்பிரமணியன் ஆகியோர்களை அழைத்து கொண்டு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு அர்ஜின் இறந்திருந்தார். நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.16 17:03:57 +0530